
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1151

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

153

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **கோட்டூர் அ.இராசசேகரன்** அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# கொள்கைத் தங்கம்!

## கோட்டூர் அ.இராசசேகரன்!

1993-ஆம் ஆண்டு, கழகத்தின் நெருக்கடியான காலகட்டம். ஒருங்கிணைந்த தஞ்சையில் செல்வாக்கு செலுத்திய கழக முன்னணியினர் கலைஞருக்கு எதிராகக் களமாடத் தொடங்கி, உச்சபட்சமாக கலைஞர் திருவாரூர் வந்தால் எதிர்ப்பு தெரிவிக்கவும் ஏற்பாடு செய்தனர். அந்த நேரத்தில், அன்றைய நாகை மாவட்டத்தில் கோட்டூர் ஒன்றியத்தில் இருந்து அழுத்தமாக ஒலித்த கழகக் குரலாகக் கவனம் பெற்றார் இராசசேகரன். அப்போது அவர், கோட்டூர் ஒன்றியச் செயலாளர்.

கலைஞரை வீழ்த்துவதற்கு நடந்த சதித்திட்டங்கள் குறித்து, 'முரசொலி'யில் அவர் எழுதிய உணர்வுபூர்வமான கட்டுரையை ஆயிரமாயிரமாகப் படி எடுத்து, தமிழ்நாடு முழுவதும் ஊர்தோறும் வாசித்தனர் உடன்பிறப்புகள். கருப்பு சிவப்பு வண்ணத்தில் அச்சிடப்பட்ட அந்தப் பிரசுரத்தை, தஞ்சை ஜில்லா முழுவதும் ஒவ்வொரு வீடாகக் கொண்டுசேர்த்து, டெல்டா மாவட்டம் என்றென்றும் கழகக் கோட்டை என்பதை நிரூபித்த உடன்பிறப்பு. "இமை கொட்டாமல் இயக்கத்தை வளர்த்த என் இளைய தம்பிகளில் ஒருவர்" என முத்தமிழறிஞர் கலைஞரால் போற்றப்பட்டவர்.

'அந்த நாட்களில்' கீழத்தஞ்சை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களில் ஒருவராக இராசசேகரனை நியமித்தார் கலைஞர். அதே வேகத்தில் திருவாரூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், "என் உயிரைக் கேடயமாகக் கொடுத்தேனும் தலைவர் உயிரைக் காப்பேன்" என அந்த மேடையிலேயே சூளுரைத்த உடன்பிறப்பு.

1949-ஆம் ஆண்டில், கோட்டூர் அருகில் உள்ள பள்ளிவர்த்தி என்கிற சிற்றூரில் பிறந்தவர். பெற்றோர் அருணாசலம் - ராமஜெயத்தம்மாள். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரிலும், உயர்நிலைக் கல்வியை மன்னார்குடி ஃபின்லே பள்ளியிலும் பயின்றவர். அங்கு பயின்றபோதே, இந்தி எதிர்ப்புக்களம் தீவிரமாக இருந்தது. பள்ளிக்காலத்தில் அவரது ஆசிரியராக இருந்தவர், கழக முன்னோடி 'துறவி' இளங்கோவன். மாணவராக மன்னை நாராயணசாமியின் பட்டறையில் சேர்ந்த இராசசேகரன், கல்லூரிக் கல்வியை பூண்டியில் படித்தபோது, 1967-ஆம் ஆண்டில், தேர்தல் பிரச்சாரத்தில் தீவிரமாகப் பங்கெடுத்துள்ளார். அதன் பின்னர், கழகப்பணிகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

### செங்கொடிக் களத்தில் கழகக்கொடி

1975-ஆம் ஆண்டுவாக்கில் ஒன்றியச் செயலாளராக அவர் பொறுப்பேற்றபோது, போக்குவரத்து வசதியில்லாத பல கிராமங்களுக்கு மிதிவண்டியிலேயே சென்று கழகம் வளர்த்தவர். விவசாயிகளும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும் நிறைந்த பகுதி கோட்டூர் ஒன்றியம். 'நாட்டை எவர் ஆண்டாலும், கோட்டூர் ஒன்றியத்தில் ரஷ்யாவின் ஆட்சிதான் நடக்கும்' என்பதுபோல, செங்கொடி செல்வாக்கு செலுத்திய பகுதி. அப்படியான களத்தில் கழகத்தின் கருப்பு சிவப்புக் கொடியைச் சுமந்து சென்றவர். ஒன்றியக் கழகத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டு, 20 ஆண்டுகள் அந்தப் பொறுப்பைத் திறம்பட வகித்தவர்.

ஒன்றியத்தில் ஒவ்வொரு தொண்டர் பெயரிலும் கடிதம் எழுதி அனுப்பியிருப்பார். அந்த அளவுக்கு அவர்களின் அனைத்து சுக துக்கங்களிலும் நேரடியாகப் பங்கேற்றவராக இருந்தார். ஒன்றியச் செயலாளராக இருந்தபோதும் அதே பண்புதான், மாவட்டக் கழகச் செயலாளராக இருந்தபோதும் அதே பண்புதான் என்கின்றனர் கழகத்தினர். குறிப்பாக, அனைத்துத் தரப்பு மக்களிடமும் கட்சிப் பாகுபாடின்றி பாலமாகச் செயல்பட்டவர்.

கழகத்தின் அனைத்துப் போராட்டங்களிலும் தவறாமல் முன்னணியில் நின்றவர். 1981-ஆம் ஆண்டில், கழகத்தின் முப்பெரும் விழா மன்னார்குடியில் நடைபெற்றபோது, இராசசேகரன் ஏற்பாடு செய்த 'பூம்புகார் அலங்கார வளைவு'க்கு முதல் பரிசு அளித்து சிறப்புச் செய்துள்ளார் கலைஞர்.

1981-ஆம் ஆண்டில், மார்ச் மாதத்தில் கைலாசம் கமிஷன் நியமன அரசு ஆணை எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்றுள்ளார். 1986-ஆம் ஆண்டில், இந்தி ஆட்சிமொழி அறிவிப்புக்கு எதிராக, தலைமைக்கழகம் அறிவித்த அரசியல் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு, திருச்சி மத்திய சிறையில் மூன்று மாதங்கள் கடுங்காவல் தண்டனை பெற்றுள்ளார்.

1993-ஆம் ஆண்டு காலகட்டத்தில், வைகோ அவர்கள் கழகத்தை விட்டுப் பிரிந்து சென்றபோது, டெல்டா மாவட்டத்தில் நிர்வாகிகள் மத்தியில் ஒரு குழப்பமான சூழல் நிலவிய நேரத்தில், கீழத்தஞ்சையில் கழகத்தின் கட்டமைப்பினை வலிமையாக்குவதில் பக்கபலமாக நின்றார். அப்போது, அவர் 'முரசொலி'யில் எழுதிய அறிக்கை, தமிழ்நாடு முழுவதும் அரசியல் களத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அப்போதுதான் மாவட்டப் பொறுப்பாளர்களில் ஒருவராக அவரை நியமித்தார் கலைஞர். 1997-ஆம் ஆண்டில் திருவாரூர் மாவட்டம் உருவாக்கப்பட்டபோது, அதன் முதல் மாவட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்பட்டதுடன், பின்னர், மாவட்டக் கழகச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார்.

கட்சிப் பணிகளுடன் மக்கள் பிரதிநிதியாகவும் சிறப்பாகப் பணியாற்றியவர், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்துப் பணியாற்றினார். மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்புக்குப் பின்னர், மாநில விவசாய அணி இணைச் செயலாளராக நியமித்தார் கலைஞர். அதிலும் சிறப்பாகச் செயல்பட்டவர்.



### கட்சிப் பணிகளில் கண்டிப்பு

களப்பணியில் மட்டுமல்லாமல்; சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தவர். மன்னையார், கோசி.மணி, தாழை.மு.கருணாநிதி, நாகை அம்பலவாணன் என ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழக முன்னோடிகளுடன் இணக்கமாகப் பயணித்தவர். கோட்டூர் கிராமங்களில் பல பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்து பேராசிரியர், முரசொலி மாறன், ஆற்காட்டார் எனப் பல தலைவர்களை அழைத்துவந்து, கொள்கை முழங்கியவர்.

'கட்சிப் பணிகளில் மிகவும் கண்டிப்பானவர். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கியதில்லை. குறிப்பாகத் தலைமை முடிவுக்கு எதிராகச் செயல்படுபவர்களைக் கண்டிப்பதிலும் அவர்களை நல்வழிப்படுத்துவதிலும் அவர் ஓர் 'இரும்பு மனிதராக'த் திகழ்ந்தார்' என்கின்றனர் அவரோடு பயணித்த கழகத்தினர். கட்சிப் பணிகளுக்காகச் சென்ற இடத்தில், அவர்மீது நடந்த தாக்குதலில், கையில் வெட்டுப்பட்டு ஓய்வில் இருந்தபோதும் கழகக் கொடியேற்றத் தவறவில்லை.


> “கட்சிப் பணிகளில் மிகவும் கண்டிப்பானவர். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கியதில்லை.”

மாநில விவசாய அணி இணைச் செயலாளராக, ஓய்வின்றிப் பணியாற்றிவந்தவர் 2012-ஆம் ஆண்டில் உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்தபோது, "கொள்கை வீரனே கோட்டூர் இராசசேகரா, தங்கமே"என கலைஞரின் நீண்ட இரங்கல் கடிதம் கழகத்தினர் கண்களில் நீரை வரவழைத்தது. அவர் இறப்புக்குப் பின்னர் நடைபெற்ற கழகத்தின் செயற்குழுவில், "கொள்கைத் தங்கம் கோட்டூர் இராசசேகரனும் இல்லாத இந்த செயற்குழு நடைபெற்றிருக்கிறதே என்கிற கவலை என்னை வாட்டி வதைக்கிறது" என தன் வாட்டத்தை உடன்பிறப்பு கடிதமாகவும் எழுதினார். அந்தக் கடிதம் வாசிக்கப்படும் காலம்தொட்டும் கொள்கைத் தங்கம் கோட்டூர் இராசசேகரன் நினைவிலிருப்பார்.

...துடிக்கும்

## வேண்டும், மீண்டும் திராவிடர் ஆட்சி!

சட்டமன்றத் தேர்தல் களம் பரபரப்பாகிக் கொண்டிருக்கும் வேளையில், ஐந்தாண்டுக் கால ஆட்சியின்மீது குறைகளைப் பட்டியலிட எதிர்க்கட்சிகள் திணறிக் கொண்டிருக்கின்றன. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு எதிராகப் போட்டியிடும் எவரும் தோல்வியுறப்போவது உறுதி என்பதை தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தொகுதிப் பங்கீடுகளே தெளிவுபடுத்திவிட்டன. திராவிட மாடல் அரசின் அமைச்சர்கள் கடந்த முறை போட்டியிட்ட தொகுதிகளில் நேரடியாக மோதினால், வெல்ல முடியாது என்ற உண்மையை உணர்ந்து, அத்தொகுதிகளைக் கூட்டணிக் கட்சிகளுக்கு லாகவமாகத் தள்ளி விட்டிருக்கிறது அ.தி.மு.க.




எதிர்க்கட்சிகள் பலமிழந்து காணப்படும் அதே வேளையில், திராவிட மாடல் அரசு தொடர வேண்டுமென்று தன்னெழுச்சியாக எண்ணற்றோர் பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில், தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாக 29.03.2026 முதல் பிரச்சாரத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளது 'திராவிடர் தளம்' அமைப்பு. பிரச்சாரத்தில் பொதுமக்களுக்கு விளக்கும் வகையில், 'வேண்டும், மீண்டும் திராவிடர் ஆட்சி!' என்ற சிறிய நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளனர்.

நீதிக்கட்சிக் காலம் முதல் 2006 - 2011 முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சிக் காலம் வரையிலும், அதன்பிறகு தற்போது 2021 முதல் 2026 வரை திராவிட மாடல் அரசு ஏற்படுத்தியுள்ள சமூகப் புரட்சிகளை விளக்கும் வகையில் உருவாகியுள்ளது இந்த நூல். 'புதுமைப்பெண் திட்டம்', 'நான் முதல்வன்', 'அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம்', 'அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்திட்டம்', 'தோழி விடுதிகள்', 'சிப்காட் குழந்தைகள் காப்பகம்', 'அன்புச்சோலைகள்' என திராவிட மாடல் அரசால் செயல்படுத்தப்பட்டுள்ள முன்னோடித் திட்டங்களையும், அவற்றின் பலன்களையும் எளிமையாக விளக்குகிறது இந்நூல்.

40 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் விலை ரூ.30. 200 பிரதிகளுக்கு மேல் வாங்குபவர்களுக்கு 50 சதவிகிதக் கழிவு வழங்கப்படுகிறது. நூல்களைப் பெற : 9942119077, 9025247411 என்ற எண்களில் தொடர்புகொள்ளலாம். Periyarbooks.com-லும் வாங்கலாம்.

## ஃப்ளாஷ்பேக்



சி.கணேஷ் பாண்டியன்



### தலைவரைக் கண்ட மகிழ்ச்சி!

2015-ஆம் ஆண்டு, எனது பிறந்தநாளை முன்னிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில் சந்தித்து, பிறந்தநாள் வாழ்த்துப் பெற்றேன். கழக வளர்ச்சிக்காக நிதி அளித்து, புகைப்படம் எடுத்து மகிழ்ந்தேன். தலைவரிடம் ஆசி பெற்றதை இன்றளவும் நினைத்துப் பெருமை கொள்கிறேன்.

**- வழக்கறிஞர் சி.கணேஷ் பாண்டியன்,**
**வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர்,**
**சென்னை தென்மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மாநகராட்சி - நகராட்சி உடன்பாடு!

1959-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சியில் கழகம் 45 இடங்களில் வெற்றி பெற்று, 17 இடங்களில் வெற்றி பெற்ற கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவுடன் மாநகராட்சியில் ஆட்சி அமைத்தது. கோவை நகராட்சியைக் கைப்பற்ற, தி.மு.க.வின் 6 உறுப்பினர்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவு அளித்தனர். சென்னை மாநகராட்சிக்கு கம்யூனிஸ்ட் ஆதரவு. கோவை நகராட்சிக்கு தி.மு.க. ஆதரவு.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900